FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318764

1. District : மாவட்டம் Tirupathur PS: காவல்நிலையம் V & AC, Tirupathur Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 1/2026 Date: நாள் 20/05/2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7 (a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 19/05/2026 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு 14.45 Hrs Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19/05/2026 Time : நேரம் 19.00 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-I Time : நேரம் 20/05/2026 at 08.30 Hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Oral Statement

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Outside at the office of Civil Supplies CID, Tirupathur. 20 km, North East

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. J. Vijaya Kumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் John

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32 yrs (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Coolie

(g) Address : முகவரி No. 183, V.M.C Colony, Noorullapettai, Vaniyambadi, Tirupathur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Sanjeevirayan, Sub-Inspector of Police, Civil Supplies CID, Tirupathur District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No Delay

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any;
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20.05.26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

20/05/2026
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20/05/2026 at 12.10 Hrs

Name: பெயர் B. GOWRI
Rank: நிலை Inspector of Police, Vigilance & Anti-Corruption Tirupathur

பணிந்து அனுப்பப்படுகிறது:- 19.05.2026 ஆம் தேதி மாலை 19.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்த போது திரு.J.விஜயகுமார் (32/2026) த/பெ ஜான், எண்.183, வி.எம்.சி காலணி, நூருல்லாபேட்டை, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு: திரு.J.விஜயகுமார் (32/2026), த/பெஜான், எண்.183, வி.எம்.சி காலனி, நூருல்லாபேட்டை, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் என்பவரது வாக்குமூலம். கைப்பேசி எண்-9677774950. நான் மேற்கண்ட விலாசத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகி ஒரு பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும் உள்ளனர். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என் மாமா சுரேஷ்குமார் என்பவர் ரேஷன் அரிசியை வாணியம்பாடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வாங்கி, அதை ஆந்திரா மாநிலத்திற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வருவார். அவருடன் நானும் கூலி வேலைக்காக சென்று அரிசி மூட்டைகள் ஏற்றும், இறக்கும் வேலை செய்து வந்தேன். இதன் காரணமாக என் மீது ஏற்கனவே இரண்டு அல்லது மூன்று ரேஷன் அரிசி தொடர்பான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த 28.04.2026 அன்று நான் ரேஷன் அரிசி எடுத்துச் சென்றதாக கூறி, TN 18 M 1081 என்ற டாடா சூப்பர் ஏஸ் வாகனத்துடன் என்னை பிடித்ததாக வாணியம்பாடியிலுள்ள திருப்பத்தூர் மாவட்ட சிவில்சப்ளை சிஐடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. சஞ்சீவிராயன் அவர்கள் என் மீது வழக்கு பதிவு செய்து என்னை ஜெயிலுக்கு அனுப்பினார். அப்போது உதவி ஆய்வாளர் திரு.சஞ்சீவிராயன் அவர்கள் என்னை ஜெயிலிருந்து வெளியே வந்தவுடன் அவரை வந்து பார்க்குமாறு சொன்னார். அந்த வழக்கில் நான் 9 நாட்கள் வாணியம்பாடி சப்-ஜெயிலில் இருந்து ஜாமினில் ஜெயிலில் இருந்து வெளியே வந்த பிறகு, இன்று 19.05.2026 மதியம் சுமார் 2.45 மணியளவில் எஸ்.ஐ அவர்களை அவரது அலுவலகத்திடம் பார்க்க சென்றேன். அப்போது அலுவலகத்தின் வெளியே நின்றிருந்த அவர் என்னிடம் வந்து ஏன் நீ எனக்கு போன மாதம் தர வேண்டிய பணம் மாமுல் ரூ.5,000/- அதோட யூனிட்டுக்கு தரவேண்டிய மாமுல் பணம் ரூ.10,000 என மொத்தம் ரூ.15,000 கொடுக்கலை அதனாலதான் உன் மீது நான் கேஸ் போட்டேன். உன்னோட புடிச்சி கேஸ் போட்ட வண்டி இங்கதான் இருக்கு நான் நினைச்சாதான் அந்த வண்டி வெளியே வருமுன்னு சொன்னார். அதற்கு நான், ஐயா, நான் மிகவும் கஷ்டப்பட்டு குடும்பம் நடத்துறவன். இனிமேல் இந்த தொழிலுக்கு போக மாட்டேன், எனக்கு எந்த பிரச்சினையும் வேண்டாம் என்று கூறினேன். அப்போது அவர் நீ போன மாசம் தொழில் செஞ்சதுக்கே பணம் கொடுக்கல. நீ மறுபடியும் அந்த தொழில செஞ்சுக்க அதற்காக மாமுல் தொகை மாதாமாதம் என் கிட்ட கொடுத்துடு நான் உன்மேல எந்த கேசும் போடாம பாத்துக்கிறேன். நீ ஒழுங்கா பணம் கொடுக்கலன்னா உன் பேரை

வேறொரு கேஸ்ல சேர்த்து மீண்டும் உள்ளே போட்டு விடுவேன் என்று சொன்னார். பின்னர் இப்போது ஏதாவது பணம் கொண்டு வந்திருக்கிறாயா என்று கேட்டார். நான் அப்போது பணம் எதுவும் என்னிடம் இல்லை என்று சொன்னதற்கு நாளைக்கு பணத்தை கொண்டு வருமாறு சொல்லி அவருக்காக ரூ.5,000/- மற்றும் யூனிட்டுக்காக ரூ.10,000/- என மொத்தம் ரூ.15,000/- லஞ்சமாக கேட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. மொத்தபணம் ரூ.15000/- என்னால் புரட்ட முடியாததால் எஸ்.ஐ அவருக்காக கேட்ட ரூ.5,000/- பணத்தை மட்டும் கொண்டுவந்துள்ளேன். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்புகாரை நான் சொல்ல சொல்ல காவல் ஆய்வாளராகிய தாங்கள் என் முன்னிலையில் லேப்டாப்பில் பதிவு செய்தீர்கள். படிக்க கேட்டேன் சொன்னபடி உள்ளது. (Sd/- XXXX) விஜயகுமார். 19.05.2026 Sir, Statement Recorded by me on 19.05.2026 at 19.00 hrs, (Sd/- XXXX) 19.05.2025 (B.Gowri) Inspector of Police, Vigilance and Anti- Corruption, Tirupathur. Sir, After verifying the antecedents of the accused and credibility of the complainant on 20.05.2026 at 08.30 hrs registered a case in Tirupathur V&A.C. Crime No.01/2026 u/s 7 (a) of the Prevention of Corruption Act,1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 (Sd/- XXXX) 20.05.2026 (B.Gowri) Inspector of Police, Vigilance and Anti- Corruption, Tirupathur.

The FIR in original along with the complaint and its enclosures sent to the Hon'ble District Session Judge cum Special Judge, Tirupathur and sent the other copies to the officers concerned.

20/05/2026

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Tirupathur.